DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.291 /2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.5 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலாஜி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 06.08.2025.

முதல் விசாரணை

நான் உடுமலை இந்திரா நகரில் வசித்து வருகிறேன். பைக் ஒர்க் சாப் வைத்துள்ளேன். கடந்த 11.10.2022 ம் தேதி 12.00–1.00 மணியளவில் நானும் என் நண்பர் லோகநாதனும் உடுமலை வந்தோம். அப்போது கலைசெல்வனும் கண்ணனும் சிவசக்தி காலனி ராஜகாளியம்மன்கோவில் அருகில் நின்று பேசி கொண்டிருந்தார்கள். முதல் நாள் இரவு பிரச்சனை ஆகி விட்டது என்று தற்சமயம் கண்ணனின் பிளசர் வாகனத்தை எங்கள் முன்பாக எடுப்பதாகவும் கூறிவிட்டு ஆவணத்தில் கையொப்பம் இடுமாறு கூறினார்கள். நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. கலைச்செல்வன் என்ன உறவு என்றால் தெரியும். அசா.1 காவல் துறையில வேலையில் இருக்கிறார் என்றால் ஆமாம். வழகக சம்பந்தமாக போலிசார் விசாரித்து வாக்குமுலம் எழுதவில்லை

என்றால் சரிதான். ராஜாகாளியம்மன்கோவிலில் அவர்கள ரோட்டின் எந்த பகுதியில் நின்றிருந்தார்கள் என்றால் வாசவி நகர் செல்லும்வழியில். கோவில் வடக்கு பார்த்து உள்ள நிலையில்அவர்கள் வடமேற்கு திசையில் நின்றிருந்தார்கள். வடமேற்கு திசையில் அசா.1 மற்றும் எதிரியும் நின்றிருந்தார்கள். அசா.1 கேட்டதால் தான் கைபயாப்பம் செய்திர்கள் என்றால் ஆமாம். அசா.1 கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிவைலயத்தில் வைத்து கையெழுத்து போட்டு விட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. அசா.1 கலைசெல்வன் தற்போ வந்தாரா என்றால் வந்தார் ஆனால் அவர் சென்றுவிட்டார். சாட்சி பின்னிட்டு இன்று இங்கு வரவில்லை என்று கூறினார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.